வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 17.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

சவுதி அரேபியாவின் **மெதினா** அருகே, இந்தியர்கள் உட்பட பலர், பேருந்து விபத்தில் உயிரிழந்தது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாநிலங்களுக்கு இடையிலான **வடக்கு மண்டல சபை**யின் கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில், ஃபரிதாபாத்தில், இன்று நடைபெற்றது.

புதுச்சேரியில் காமராஜர் கல்வி உதவித் திட்டத்தின் கீழ், மொத்தம் 3.14 கோடி ரூபாய் **நிலுவை நிதி உதவி**களை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார்.

தென்கிழக்கு வங்க கடல் பகுதியில், வரும் 22-ஆம் தேதி வாக்கில் **காற்றழுத்த தாழ்வுப் பகுதி** உருவாக கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மெதினா-இரங்கல்

சவுதி அரேபியாவின் மெதினா அருகே, இந்தியர்கள் உட்பட பலர் பேருந்து விபத்தில் உயிரிழந்தது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயம் அடைந்தவர்கள், விரைவில்

குணம் பெறத் தாம் வேண்டுவதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். ரியாத் மற்றும் ஜெட்டாவில் உள்ள இந்திய தூதரகங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருவதாகவும், இந்திய அதிகாரிகள், சவுதி அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, மெதினாவில் விபத்திற்குள்ளான பேருந்தில் ஐதராபாத்தைச் சேர்ந்த இந்தியப் பயணிகள் பலரும் இருந்ததாக தகவல் வெளியானதைத் தொடர்ந்து இதுகுறித்த விவரங்களைச் சேகரிக்குமாறு தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி, மாநில அரசின் தலைமைச் செயலருக்கும் காவல் துறை தலைவருக்கும் உத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, ஐதராபாத்தில் உள்ள மாநில அரசின் தலைமைச் செயலகத்திலும் டெல்லியில் உள்ள தெலங்கானா பவன் கட்டிடத்திலும் இலவச தொலைபேசி எண்களுடன் கூடிய, கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

*அமித் ஷா*

பஞ்சாப், அரியானா, டெல்லி, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களும் லடாக், ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களும் அடங்கிய, வடக்கு மண்டல சபையின் கூட்டம், அரியானா மாநிலம் பரிதாபாத்தில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று நடைபெற்றது. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்களும், மூத்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் குறித்தும், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நீர்ப் பகிர்வு பிரச்சனைகள் குறித்தும் இக்கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. வளர்ச்சி நோக்கங்களை எட்டுவதில் நாடு ஒரே அணியாக செயல்பட வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வையின் அமலாக்கத்தில், மண்டலவாரியான சபைகள் முக்கிய பங்களித்து வருவதும் வலுவான மாநிலங்கள் தான்,

வலுவான நாட்டை உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையில் முக்கிய ஆலோசனை அரங்காக மண்டல சபைகள் செயல்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது.

*ஜிஎஸ்டி-பீகார்*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், பீகாரீல் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் பீகாரில் விவசாயிகள், தொழில் துறையினர் மற்றும் நுகர்வோர் பெருமளவில் ஊக்கம் பெற்றுள்ளனர். அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரி குறைக்கப் பட்டுள்ளதால் நுகர்வோருக்கு மலிவான விலையில் இப்பொருட்கள் கிடைப்பதுடன், வியாபாரிகளுக்கும் லாபம் அதிகரித்துள்ளது. மக்கனா என்னும் தாமரை விதை மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகதமாக குறைக்கப்பட்டுள்ளதால், மக்கனா உற்பத்திக்கு புகழ்பெற்ற தர்பங்கா, மதுபனி மற்றும் பூர்ணியா மாவட்டங்களில் விவசாயிகளுக்கு முக்கிய பலன் ஏற்பட்டுள்ளது. பீகாரில் 9 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் பால்பண்ணைத் துறையில், வெண்ணெய், நெய் மற்றும் ஐஸ்கிரீம் மீதான வரி குறைப்பினால், ஊக்கம் அதிகரித்துள்ளது. தேன் மற்றும் தொடர்புடைய இதர பொருட்கள் மீதான ஜிஎஸ்டி 5 சதவிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் முசாபர் பூர் பகுதியில் இத்துறை சார்ந்த கிராமப்புற மக்களின் வாழ்வாதாரமும், கூட்டுறவு அமைப்புக்களும் வலுப்பெற்றுள்ளன. மொத்ததில் அடுத்த தலைமுறை

ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், பீகாரில் பொருட்களின் விலை குறைந்து, உள்ளூர் தொழில்கள் ஊக்கம் பெற்று, கிராமப் புற மக்களின் வாழ்வாதாரமும் மேம்பட்டுள்ளது.

*பீகார்-பதவி ஏற்பு*

பீகாரில் புதிய அரசின் பதவி ஏற்பு விழா, பட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில், வரும் 20-ஆம் தேதி நடைபெற உள்ளது. பதவி ஏற்பு விழாவிற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே தொடங்கி நடைபெற்று வருகின்றன. விழாப் பகுதியை சுற்றி போலீஸ் பாதுகாப்பு வலுபடுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, பட்னாவில் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் தலைமையில் இன்று நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போதுள்ள அமைச்சரவையைக் கலைக்க ஆளுநருக்கு பரிந்துரைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து திரு நிதிஷ்குமார், ஆளுநர் திரு ஆரிப் முகமது கானை சந்தித்து தீர்மானம் குறித்த கடித்தை சமர்பித்தார். இன்றைய தினம் ஐக்கிய ஜனதா தளத்தின் சட்டமன்றக் குழுக் கூட்டத்தில் அதன் தலைவராக திரு நிதிஷ்குமார் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நாளை நடைபெற உள்ள தேசிய ஜனநாயக கூட்டணியின் சட்டமன்றக் குழுக் கூட்டத்தில் அதன் தலைவராக திரு நிதிஷ்குமார், தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும், அதைத் தொடர்ந்து பீகார் ஆளுநரை அவர் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோருவார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

*ரங்கசாமி*

புதுச்சேரியில் காமராஜர் கல்வி உதவித் திட்டத்தின் கீழ், மொத்தம் 3.14 கோடி ரூபாய் **நிலுவை நிதி உதவி**களை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், 2021-22-ஆம் ஆண்டில் படிப்பில் சேர்ந்த 134 மருத்துவ மாணவர்கள், மற்றும், 165 செவிலியர் பயிற்சி மாணவர்களுக்கு, நான்காம் ஆண்டுப் படிப்பிற்கான நிதி உதவி, தற்போது வழங்கப் பட்டுள்ளதாகவும், 2022-முதல், 2025 வரை உள்ள கல்வி உதவித் தொகை விரைவில் வழங்கப்படும்

என்றும் தெரிவித்தார். கலைக் கல்லூரி மாணவர்களுக்கும் அரசு அறிவித்த உதவித் தொகை வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

புதுச்சேரியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு கோதுமை வழங்குவதற்கான டெண்டர் நடைமுறைகள், ஓரிரு நாட்களில் முடிக்கப்படும் என்றும், கல்வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு அனுமதி அளித்துள்ள ஆயிரத்து 750 வீடுகளுக்கு முதல் தவணை நிதி உதவி வழங்கப்படும் என்றும், முதலமைச்சர் தெரிவித்தார். காவல் துறை உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு ஒரு மாத காலத்தில் தேர்வு நடத்தப்படும் என்றும், அவர் கூறினார் கேள்வி ஒன்றுக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி பதில் அளிக்கையில் பீகார் சட்டமன்ற தேர்தல் முடிவுகள் மகிழ்ச்சிக்கு உரியது என்றும், 2026-புதுச்சேரி சட்டமன்ற தேர்தலிலும் இது எதிரொலிக்கும் என்றும் கூறினார். தேசிய ஜனநாயக கூட்டணியில் தான் தாங்கள் இருப்பதாகவும் தேர்தல் வரும்போது கூட்டணி தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலமைச்சரின் பேட்டியில் இருந்து ஒரு பகுதி........

(வாய்ஸ்-முதலமைச்சர்)

இஸ்ரோ

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் மேலும் 7 செயற்கை கோள்களை விண்ணில் செலுத்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. பிஎஸ்எல்வி மற்றும் ஜிஎஸ்எல்வி ராக்கெட்டுகள் மூலமான செயற்கை கோள்களும் வர்த்தக ரீதியிலான மற்றொரு செயற்கை கோள்களும் இதில் அடங்கும். நிலவில் இருந்து கனிம மாதிரிகளை எடுத்துக் கொண்டு திரும்பும் வகையிலான சந்திரயான்-4 விண்கலம், மற்றும், ஜப்பானுடன் இணைந்து நிலவின் துருவப் பகுதியை ஆராய்வதற்கான லூபெக்ஸ் விண்வெளி திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக இஸ்ரோ தலைவர் திரு வி நாராயணன், பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். 2035-ஆம் ஆண்டிற்குள், இந்திய விண்வெளி மையம் ஒன்றை விண்ணில் அமைக்கும் திட்டத்திற்கான பணிகள்

தொடங்கி விட்டதாகவும் இந்திய விண்வெளி வீரர் ஒருவருடன் இந்திய விண்கலம் ஒன்றை விண்ணில் செலுத்துவதற்கான இலக்கு, 2027-ஆம் ஆண்டாக நீடிப்பதாகவும் திரு நாராயணன் தெரிவித்தார்.

இதுஅல்லாது 2040-ஆம் ஆண்டிற்குள் இந்திய விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பவும் திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு, பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவுறுத்தி இருப்பதாக, அவர் மேலும் கூறினார்.

வானிலை

இன்று தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டி நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் வடமேற்கு திசையில் மெதுவாக நகரக் கூடும் என்றும், வரும் 22-ஆம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்க கடல் பகுதியில் மற்றொரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், மேலும் வலுப்பெறக் கூடும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், கடலோர தமிழகத்தின் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தின் ஒரு சில இடங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

கடலூர்,விழுப்புரம், நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்கள் மற்றும் காரைக்கால் பகுதியில் மிக கனமழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 23-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நாகை மாவட்டம் கோடியக் கரையில் 12 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி நகரப் பகுதியில் 6 சென்டிமீட்டர் மற்றும் காரைக்காலில் 4 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

படகு

எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களை, எதிரிகள் அறியா வண்ணம் சென்று தாக்க வல்லதாக, முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைத்துக் கட்டப்பட்டு, வரும் 24-ஆம் தேதி இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட உள்ள, நாட்டின் முதலாவது **மாஹி ரக போர்ப் படகின் சின்னத்தை** கடற்படை இன்று வெளியிட்டுள்ளது. கேரளத்தின் **களரிப்பயட்டு** வீர விளையாட்டில் பயன்படுத்தப்படும் **உருமி வாள்**, மாஹி ரக போர்ப் படகின் சின்னத்தில், முக்கியமாக இடம் பெற்றுள்ளது. நாட்டின் கலாச்சார மரபுகளையும், தொழில் நுட்பத் திறன்களையும் ஒரு சேர வெளிப்படுத்தும் வகையில், இச்சின்னம் அமைந்து இருப்பதாக, கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*மின்னணு*

மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டத்தின் கீழ் 2-ஆம் கட்டமாக 17 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கான இந்த முதலீட்டு உத்தேசங்களுக்கு மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில், ஒப்புதல் ஆணைகளை வழங்கினார். இத்திட்டங்களால் நாட்டின் மின்னணு உதிரி பாகங்கள் துறையில், சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கும் என்றும், 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில், வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார். இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா, இந்நிகழ்ச்சியின் போது உடன் இருந்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சவுதி அரேபியாவின் **மெதினா** அருகே, இந்தியர்கள் உட்பட பலர், பேருந்து விபத்தில் உயிரிழந்தது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாநிலங்களுக்கு இடையிலான **வடக்கு மண்டல சபை**யின் கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில், ஃபரிதாபாத்தில், இன்று நடைபெற்றது.

புதுச்சேரியில் காமராஜர் கல்வி உதவித் திட்டத்தின் கீழ், மொத்தம் 3.14 கோடி ரூபாய் **நிலுவை நிதி உதவி**களை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார்.

தென்கிழக்கு வங்க கடல் பகுதியில், வரும் 22-ஆம் தேதி வாக்கில் **காற்றழுத்த தாழ்வுப் பகுதி** உருவாக கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/17.11.2025/Script/

-------------------------------